பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 11 2024 SATURDAY 7.15 PM

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தி திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.
- இந்தியா — நைஜீரியா இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- ஜனநாயகத்தை பாதுகாப்பதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது, மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஐந்து பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
- பீகாரில் நடைபெற்ற ஆசிய சாம்பியன் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில், இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.

*-- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>

பழங்குடியினர் சமூகம் நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், பழங்குடியின சமுதாயத்தின் கலாச்சாரம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் மதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கலாச்சார ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தி தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>

இந்தியா — நைஜீரியா இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நைஜீரியா, பிரேசில், கயானா நாடுகளுக்கு ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக புதுதில்லியிலிருந்து இன்று புறப்பட்டு சென்றார்.

முன்னதாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள இந்தியாவின் நட்பு நாடான நைஜீரியா நாட்டிற்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்று குறிப்பிட்டுள்ளார்.

நைஜீரியாவில் உள்ள இந்திய வம்சாவளியினரை சந்தித்து கலந்துரையாட ஆவலுடன் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நைஜீரியா பயணத்திற்கு பின்னர் பிரேசில் செல்லும் பிரதமர், ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டுக்கு இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கயானா நாட்டு அதிபர் திரு முகமத் இர்பான் அலியின் அழைப்பை ஏற்று செல்லும் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.

இந்த பயணத்தின்போது பல்வேறு துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்க உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பின்னர், அங்கு நடைபெறவுள்ள கரீபியன் கூட்டமைப்பு நாடுகள் பங்கேற்கும் உச்சிமாநாட்டிலும் பிரதமர் பங்கேற்கிறார்.

கடந்த 50 ஆண்டுகளில் இந்திய பிரதமர், கயானா நாட்டிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

<<<<<<>>>>

ஜனநாயகத்தை பாதுகாப்பதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

தேசிய பத்திரிகை தினத்தையொட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், சுதந்திரப்போராட்டத்தில் ஊடகத்துறையினரின் பங்களிப்பு அளப்பரியது என்று குறிப்பிட்டார்.

ஊடகங்களில் வெளியாகும் தவறான தகவல்கள், வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் காணொலி மூலம் உரையாற்றிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், ஜனநாயகத்தின் நான்காவது தூணாக பத்திரிகைத்துறை உள்ளது என்று கூறினார்.

போலியான செய்திகள் கவலையளிப்பதாக உள்ளது என்று கூறிய திரு எல். முருகன், பத்திரிகை தகவல் அலுவலகத்தின் உண்மை கண்டறியும் பிரிவின் செயல்பாடுகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

<<<<<<>>>>

குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வர்த்தக செயல்பாடுகளில் மாற்றங்களை உருவாக்கும் வகையில் பசுமை தொழில்நுட்ப பயன்பாட்டில் கவனம் செலுத்தப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜித்தன் ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சர்வதேச வர்த்தக கண்காட்சியில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் இதனை தெரிவித்தார்.

நடப்பாண்டில் நடைபெறவுள்ள குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கண்காட்சியில் 29 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 200 பிரதிநிதிகள் கலந்துகொள்ள உள்ளதாக அவர் கூறினார்.

இந்த கண்காட்சிகளில் ஜவுளி, கைத்தறி, கைவினைப் பொருட்கள், எம்ராய்ட்ரி, தோல்களால் ஆன காலணிகள், விளையாட்டுப்பொருட்கள், பிரம்பு மற்றும் மூங்கிலால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், ஆபரணங்கள், உள்ளிட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

<<<<<<>>>>

சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது, மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஐந்து பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நாராயண்பூர் மாவட்டத்தில் உள்ள வடக்கு Aboojhmaad பகுதியில் எல்லை பாதுகாப்புப்படையினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில் தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தில் இரண்டு பாதுகாப்புப்படை வீரர்கள் காயமடைந்துள்ளதாகவும், தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

மணிப்பூரில் சட்டம் - ஒழுங்கு மற்றும் அமைதியை நிலைநிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புப்படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரிவான விசாரணைக்காக முக்கிய வழக்குகள் தேசிய புலனாய்வு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில காவல்துறை அமைதியான சூழலை பராமரிப்பதுடன், வதந்திகள் பரப்பப்படுவதையும் தடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் இரண்டாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

தும்கா மாவட்டத்தில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா, ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு பழங்குடியின சமுதாயத்தை வாக்கு வங்கியாக பயன்படுத்தி வருவதாக குற்றம் சாட்டினார்.

அம்மாநிலத்தில் பழங்குடியினர் முன்னேற்றத்திற்கான நலத்திட்டங்களுக்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யவில்லை என்று அமித் ஷா குறிப்பிட்டார்.

தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர்களில் ஒருவரும், அம்மாநில முதலமைச்சருமான திரு ஹேமந்த் சோரன், மத்திய அரசு புலனாய்வுத்துறைகள் மூலம் மாநில அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி வருவதாக குறை கூறினார்.

இதனிடையே, Khijri மற்றும் Jamtara பகுதியில் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கேயும், Godda பகுதியில் ராஷ்ட்ரிய ஜனதாதள் தலைவர் திரு தேஜஸ்வி யாதவும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

<<<<<<>>>>

சிரோண்மணி அகாலிதள் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து பஞ்சாப் மாநில முன்னாள் துணை முதலமைச்சர் திரு சுக்பீர் சிங் பாதல் ராஜினாமா செய்துள்ளார்.

இதற்கான கடிதத்தை செயற்குழுவிற்கு இன்று அவர் அனுப்பி வைத்துள்ளதாக அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் டாக்டர் தல்ஜீத் சிங் சீமா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு ஏதுவாக அவர் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் ரயில்வேத்துறையை மேம்படுத்தும் வகையில், அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ், 508 ரயில் நிலையங்களை சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் உள்ள வேலூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்பு நடவடிக்கைகள் வெகுவாக கவர்ந்துள்ளது என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

*(வாய்ஸ் பைட் - பயணிகள் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>

பாகிஸ்தானின் பலுஜிஸ்தான் மாகாணத்தில் உள்ள ராணுவ முகாமை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அந்நாட்டை சேர்ந்த ஏழு பாதுகாப்புப்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு பலோஜ் விடுதலை அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

கலாத் பகுதியில் அமைந்துள்ள ராணுவ முகாமின் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய சாம்பியன் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில், இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.

பீகாரில் நடைபெற்ற இப்போட்டியில், இந்தியாவின் சங்கீதா, சலிமா, தீபிகா ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

----------

மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆதில் கல்யாண்பூர் - பிரஜ்வால் தேவ் இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-4, 4-6, 10-7 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் ஆதித்யா கணேசன் - இந்தியாவின் ஆரியன் ஷா இணையை வென்றது.

----------

<<<<END>>>>